



# தொழில் துறை

## சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

மானியக் கோரிக்கை எண். 27

அறிவிப்புகள்

2018–2019

# தொழில் துறை

## சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

### மானியக் கோரிக்கை எண். 27

## அறிவிப்புகள்
## 2018 – 2019


# சி.வி. சண்முகம்

**சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்**
**சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**

# தொழில் துறை
## சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

## அறிவிப்புகள்
## 2018 – 2019

**1. புவியியல் மற்றும் சுரங்கத் துறை தலைமையகத்தில் அமைந்துள்ள புவி அமைப்பியல் மற்றும் சுரங்க அருங்காட்சியகத்தை ரூபாய் 50 இலட்சம் செலவில் மேம்பாடு செய்தல் மற்றும் தகவல் மையம் உருவாக்குதல் (One Stop Information Center)**

புவியியல் மற்றும் சுரங்கத் துறை தலைமையகத்தில் அமைந்துள்ள புவி அமைப்பியல் மற்றும் சுரங்க அருங்காட்சியகத்தை **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 50 இலட்சம் செலவில் மேம்படுத்தி தகவல் மையம் உருவாக்கப்படும். இதன் மூலம், கனிமம், சுரங்கம், கனிமத்தை கண்டுபிடித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல்

தொடர்பான தகவல்கள் இளைய தலைமுறையினர் மற்றும் தொழில் முனைவோருக்கு கொண்டு செல்லப்படும்.

புவி அமைப்பியல் மற்றும் சுரங்க அருங்காட்சியகத்தில் தொழில்நுட்ப முறையில் அளிக்கப்படும் பயிற்சியின் மூலம் வருடத்திற்கு 500 புவியியல் பயிலும் மாணவர்கள் மற்றும் சுரங்க குத்தகைதாரர்கள் பயன் பெறுவர்.



**2. புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் நான்கு துணை இயக்குநர் பதவிகள் தரம் உயர்த்தப்பட்டு நான்கு மண்டல இணை இயக்குநர் பதவிகள் மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் விழுப்புரம் ஆகிய நான்கு மண்டலங்களில் ஏற்படுத்தப்படும்.**

மாவட்ட சுரங்க நிர்வாக பணிகளை துரிதப்படுத்தி அரசுக்கு வருவாய் சேர்க்கவும், மாவட்ட கனிமக் கட்டமைப்பு நிதியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை கண்காணித்து அரசுக்கு அறிக்கை அளிக்கவும், மண்டல அளவில் சட்ட விரோத குவாரிப்பணிகள் தடுப்பு மற்றும் குற்றவியல் நடவடிக்கை குறித்தான விழிப்புணர்வை குத்தகைதாரர்களுக்கு பயிற்சியின் மூலம் ஏற்படுத்தவும் **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் விழுப்புரம் என நான்கு மண்டலங்களை உருவாக்கி ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு இணை இயக்குநர், பதவி உயர்வின் மூலம் பணியமர்த்தப்படுவர்.

## 3. புவியியல் மற்றும் சுரங்கத்துறையில் கூடுதலாக ஒரு மண்டல பறக்கும் படை திருச்சிராப்பள்ளி மண்டலத்தில் அமைக்கப்படும்.

சட்ட விரோத குவாரி மற்றும் கனிமக் கடத்தலை முற்றிலும் தடுத்து நிறுத்தி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படா வண்ணம் செயல்பட புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** கூடுதலாக ஒரு பறக்கும் படை திருச்சிராப்பள்ளி மண்டலத்தில் புதிதாக உருவாக்கப்படும்.



## 4. மாவட்ட சுரங்கத்துறை மற்றும் மண்டல பறக்கும்படை அலுவலர்களின் வாகனங்களுக்கு ரூபாய் 2 இலட்சம் செலவில் GPS கருவி பொருத்தப்படும்

மாவட்ட சுரங்கத்துறை மற்றும் மண்டல பறக்கும்படை அலுவலர்கள் இரவு மற்றும் பகல் நேரங்களில் வாகனச் சோதனை மேற்கொள்ள களப்பணிக்கு செல்லும்போது அவர்களின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு வாகனங்களின் இருப்பிடம் மற்றும் அவர்களின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியரகம் மற்றும் தலைமையகத்திலிருந்து கண்காணித்து அவர்களின் பணியை மேம்படுத்த தக்க ஆலோசனைகள் வழங்க ஏதுவாக மேற்படி வாகனங்களில் **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 2 இலட்சம் செலவில் GPS கருவி பொருத்தப்படும்.

**5. மாவட்ட சுரங்கத்துறை மற்றும் மண்டல பறக்கும்படை அலுவலர்களுக்கு ரூபாய் 3.50 இலட்சம் செலவில் கம்பியில்லாக் கையடக்கக் கருவி அளித்து அதனை மாவட்ட நிர்வாகத்துடன் இணைத்து களப்பணியினை மேம்படுத்துதல்.**

களப்பணியில் இருக்கும் மாவட்ட சுரங்கத்துறை அலுவலர்கள் மற்றும் மண்டல பறக்கும்படை அலுவலர்கள் தங்கள் களப்பணியின்போது ஏற்படும் அசம்பாவிதங்கள் மற்றும் அவசரப் பணிகள் நிமித்தமாக மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட காவல்துறை ஆகியோரின் ஆலோசனை மற்றும் உதவியினை கோருதல் தொடர்பாக நிர்வாகத்தினை தொடர்பு கொண்டு உடனுக்குடன் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண சம்பந்தப்பட்ட சுரங்கத்துறை களப்பணி அலுவலர்களுக்கு **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 3.50 இலட்சம் செலவில் கம்பியில்லாக் கையடக்கக் கருவி வழங்கப்படும்.



**6. மாவட்ட சுரங்கத்துறை அலுவலகம் மற்றும் தலைமையகத்திற்கு 25 புதிய ஈப்பு வாகனங்கள் ரூபாய் 2 கோடி செலவில் வாங்கப்படும்.**

புவியியல் மற்றும் சுரங்கத்துறையில் தற்போது உள்ள ஈப்பு வாகனங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் மாவட்ட அளவில் களப்பணி ஆய்வு மற்றும் கனிம நிர்வாகத்தினை திறன்பட செயல்படுத்த தலைமையகத்திற்கு 5 புதிய ஈப்பு வாகனங்களும் மண்டல அலுவலகம், பறக்கும் படை மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு 20 புதிய ஈப்பு வாகனங்களும் என மொத்தம் 25 புதிய ஈப்பு வாகனங்கள் **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 2 கோடி செலவில் வாங்கப்படும்.

**7. மாவட்ட கனிமக் கட்டமைப்பு நிதியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்ய வட்டார வளர்ச்சி அலுவலர் பதவியினை மண்டல அளவில் உருவாக்குதல்.**

மாவட்ட கனிமக் கட்டமைப்பு நிதியின் மூலம் மேற்கொள்ளப்படும் சுரங்கப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டங்களின் செயல்பாட்டின் தரத்தினை கூராய்வு செய்து அவற்றின் மெய்த்தன்மை குறித்து அரசுக்கு அறிக்கை அளிக்க மண்டலத்திற்கு ஒன்று வீதம் சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் விழுப்புரம் ஆகிய நான்கு மண்டலங்களுக்கும் நான்கு வட்டார வளர்ச்சி அலுவலர் பதவிகள் ஊரக வளர்ச்சி துறையில் இருந்து பணிமாற்றத்தின் மூலம் **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ஆண்டொன்றுக்கு ரூபாய் 40 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்



**8. தமிழ் நாடு மேக்னசைட் நிறுவனம் (TANMAG) ரூபாய் 18.09 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களை செயல்படுத்தும்.**

தமிழ் நாடு மேக்னசைட் நிறுவனம் **(TANMAG)** தனது சொந்த நிதி மூலமாக **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 18.09 கோடி மதிப்பிலான கீழ்கண்ட திட்டங்களை செயல்படுத்தும்.

அ) மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் ஆலை ரூபாய் 16 கோடி மதிப்பில் சுழற்சூளை பிரிவின் அருகில் கட்டப்படும்.

ஆ) முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட்டை துகள்களாக்கி மதிப்பு கூட்டுவதற்காக ரூபாய் 40 இலட்சம் செலவில் அரவை இயந்திரம் கொள்முதல் செய்யப்படும்.

இ) டுனைட்டை அரைத்து அதன் மதிப்பைக் கூட்டுவதற்காக ரூபாய் 25 இலட்சம் மதிப்பில் இயந்திரங்கள் நிறுவப்படும்.

ஈ) சுழற்சூளை பிரிவில் மாதிரி தயாரிக்கவும், பகுப்பாய்வு செய்வதற்காகவும் நவீன ஆய்வு கூடம் ரூபாய் 74 இலட்சம் மதிப்பில் அமைக்கப்படும்.

உ) சுழற்சூளை பிரிவில் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் சேமிப்பதற்காக ரூபாய் 38 இலட்சம் மதிப்பில் கூடுதல் கிடங்கு கட்டப்படும்.

ஊ) சுழற்சூளை பிரிவில் சிமெண்ட் கான்கீரிட் சாலை (phase II) ரூபாய் 32 இலட்சம் மதிப்பில் அமைக்கப்படும்.

**சி.வி. சண்முகம்**
**சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்**
**சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**